உ

சிவமயம்



மூதூரைப் பிறப்பிடமாகவும் திருக்கோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். திரு. கந்தையா குலநாயகம்

(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி - மூதூர்)

அவர்களின்

# நினைவு இரங்கல் பாமலர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நினைவு இரங்கல் பா மலர்

மண்ணில் 09 - 02 - 1940

விண்ணில் 17 - 01 - 2009



அமரர்

## திரு. கந்தையா குணநாயகம்

(உதவி முகாமையாளர் மக்கள் வங்கி – மூதூர்)

அவர்கள்

## திதி நிர்ணயம்

பிறந்த சர்வதாரி வருடம் தைத்திங்கள் பதினேழிலே
சிறந்த சனி அபரபக்கம் சப்தமி தனிலே
மூதூர் பெற்றெடுத்த குலமகன் குணநாயகம்
விண்ணுலகு சேர்ந்தே நற்பேறு கண்டாரே

16 - 02 - 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இன்பமாய் இனிதாய் வாழ்ந்து

கண்ணை இமை காப்பது போல்

கருத்தோடு எமைக் காத்து

பந்தமாய் தன்வசம் பாசமாய் பரிவாய்

ஒளிதந்து சென்ற இடமெல்லாம் சிறப்புற

செம்மனே நற்பெயர் பூண்டு

துன்ப அலைகளையும்

இன்பமாய்க்கழித்து

ஆண்டவன் நிழலில் அமரத்துவமடைந்த

அன்புத் தெய்வத்தின் பாதக்கமலங்களில்

ஓயாத நினைவுகளுடன் சமர்ப்பணம்

இவ்வண்ணம்

**மனைவி, பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ சிவ



## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே

## திருவாசகம்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னை யாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோன் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்,
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்!
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற்காட் செய்மின் குழாம் புகுந்
அண்டங் கடந்த பொருள்
அளவில்லாதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று என்றுமுள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாச்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். கந்தையா குணநாயகம்
## அவர்களின் சரிதம்

மாணிக்க தீவென்னும் ஈழவள நாட்டிலே
காணிக்கை பொன்னகராம் மூதூர் தனிலே
நீர்வளம் நிலவளம் மலிந்த சம்பூர்ப் பதியில்
சீர்பூத்த சைவவேளாளர் குலமரபு தனிலே
பேராளன் எனவியக்கும் கந்தையாவிற்கும்
பார்புகழும் நல்லாள் அன்னம்மாவிற்கும்
ஊனமில்லா ஆயிரத்துதொளாயிரத்து நாற்பதிலே
ஊர் சிறக்கும் வண்ணமாய் குணநாயகம் வந்துதித்தார்
ஏகபுத்திரனாய் தவழ்ந்து நடைபயிலும்வேளை
செல்வம் மிகுந்து வளம் பெருகிய காலமதில்
புள்ளிமானென துள்ளிவரும் பருவத்தில்
பெற்றோரும் கல்வியூட்டி சிறக்கவைக்க எண்ணியே
மூதூர் அந்தோனியார் கல்விக்கூடத்திலே
பாங்குடனே தம்மகனை பள்ளிவைத்தார்
பெயருக்கேற்றாற்போல் நற்பண்புடனே
ஆழ்ந்த புலமைபெற்று நல்லிழைஞரானார்
கல்விதனை நன்கே முடித்தே பின்னர்
தொழில்தேடும் பெருநோக்கோடு நாளில்
பலநோக்கு கூட்டுறவு வங்கியிலே சேர்ந்து நின்றார்
கொடுக்கும் பணிகளை மனமுவந்தேற்றே
ஊழியம் செய்தே நற்பெருமை கண்டார்
பால்போல் முழுமதியாய் உலவிவருவது கண்டே
உறவினர் சேர்ந்தே இருபத்தாறாவது அகவையிலே
சித்திரவேலும் கற்பகமும் பெற்றெடுத்த நல்லாள்
கமலேஸ்வரியை முழுமனதுடனே திருமணம் செய்து வைத்தார்
வளரும் துன்பம் போக்கியபடியே நாளும் பொழுதும்
இருமனம் இணைந்தே பெருவாழ்வு கண்டார்
கனிவாக பேசியே உறவுகளை அணைத்தெடுப்பார்
தேசபக்தி கொண்டவராய் தமிழ்மீது அன்புகொள்வார்
மனைவியின் சகோதரர்களை ஆதரித்தே நிற்பார்
மனம்கோணாத அத்தானாய் காவலனாய் என்றுமிருப்பார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப நலம் பேணுகையில் வரும் துன்பமெல்லாம்
மனையாளோடு நின்றே தாங்கி நிற்பார்
செல்வப் பெருக்கோடு சேர்ந்துவாழும் போதினிலே
முன்னவனாய் அமரர் ராஜ்குமாரையும்
பின்னவளாம் சுபாஜினி ராதாமோகன் உடனே
ராஜமனோகரனுடன் கடைக்குட்டி ஸ்ரீகணேசன் ஈறாய்
பிள்ளைகளைப் பெற்றே பெருவாழ்வு கண்டார்
மீன்பாடும் தேனாட்டில் வங்கி ஊழியனாய்
மூதூரும் திருமலையுமாய் வங்கிப் பணிபுரிந்தே
உதவி முகாமையாளனாய் உயர்வு பெற்றார்
செல்வம் பெருக்கி மக்களோடு வாழும்போதில்
எந்திரியாய் தெரிவுபெற்ற செல்வ மகனாம்
ராஜ்குமாரை இழந்தே வாழ்வை மறந்தே
மாறாத துயரம் கண்டு பணிமறந்து நின்றார்
மிடுக்கான பேச்சும் சிரிப்பும் மாறி
தொலைந்துபோன மைந்தனுக்காய் அழுது நின்றார்
மனதில் தோன்றிய கற்பனைக் கோட்டையெல்லாம்
தகர்ந்துபோன சேதிகண்டு மனம்பதைத்துப் போயிருந்தார்
இல்லாள் அடையும் பெரும் துன்பம் கண்டே
செய்வதறியாது திகைத்து நின்றார்
குழந்தைகளை உயர்த்தும் சிந்தை கொண்டே
அனைவருக்கும் கல்வியை ஊட்டி வைத்தார்
கற்றவிதம் அறிந்தே தன்நிலை தெரிந்தே
உற்றபொழுதும் ஓய்விலாது பாடுபட்டார்
ஓய்வுபெறும் வயதும் விரைந்துவரவே
ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றேழில்
சேவையிலிருந்தே ஓய்வு பெற்றார்
ஊருராய்ச் சென்றே உறவுகொள்வார்
பிரிந்துபோன உறவுகளுக்காய் நிதமும்
பரிவோடு நின்றே அன்பு செய்வார்
வண்ண வாழ்வு முடியும்நேரம் கூடிவரவே
காற்றோடு வந்த மாயக் கயிறொன்று
போற்றிய அகவை அறுபத்தொன்பதிலே
மாற்றியது உடலை மண்ணோடு கொண்டே
பாய்ந்தோடும் தேனாறு நின்றதுபோலே
வாய்நிறை வார்த்தை வளராததுபோலே
சாய்ந்தானம்மா சங்கரன் தன் காலடியிலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

கண்ணுக்குக் கண்ணாய் நின்றுயர்த்தி
கண்ணைப்பறிக்கும் மின்னலென
மாய்ந்து மறைந்த மாயமென்ன
பால்போன்ற மேனி வாடி
விரைந்தழிந்த செய்தியென்ன
கண்மூடும் வேளையிலே உன்முகம்தான்
நின்று மறைந்து போவதென்ன
தனியே என்னைத் தவிக்கவிட்டே
விரைந்தோடி நீயும் எங்கு சென்றாயோ
மீண்டும் வரும் நாளை எண்ணி நின்றே
தெண்டனிட்டே அழுகின்றேன்
உன் ஆத்மா சாந்திபெற

## ஆசை காட்டிய தந்தையே

நெஞ்சிலே தினமிருத்தி எம்மை
அன்புகாட்டி வளர்த்த தந்தையே
சொல்லாமல் விரைந்து மறைந்ததேனோ
பொன்போல் புதல்வர்களை எண்ணியே
ஆசை காட்டி எமை வளர்த்தாயே
கண்போல காத்தே எந்நாளும்
கனிவான கண்டிப்புடனே நின்றாயே
பொல்லாத காலன் உமை பறித்தெடுத்தானே
தலை நிமிர்ந்து குடும்பம் வளர்கையிலே
எமைப் பிரிந்து சென்ற மாயமென்ன
தாயுடன் நாமும் படும் துயர் அறிவாயோ
மீண்டும் வருவாயென காத்திருப்போம்

**அன்பு மகன்மார், மகள் :-**

**ராதாமோகன்**
**ராஜமனோகரன்**
**ஸ்ரீகணேஷன்**
**சுபாஜினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையே எங்கு சென்றீர்....

*தீபம் போல் ஒளிதந்தே எனக்குப்*
*பண்பும் பயனும் தந்த தந்தையே*
*சாபம் வந்ததுபோல் மறைந்துபோன மாயமென்ன!*
*தேடித் தேடித் துடிக்கின்றேன்*
*தேம்பித் தேம்பி பதைக்கின்றேன்*
*மாற்றம் கண்டு வாராயோ*
*அன்பு மடியில் முகம் புதைக்க*
*மீண்டும் எமைத்தேடி வாராயோ*
*கோபத்திலும் நெகிழ்ந்து நிற்பாயே*
*ஆசை முகம் காணும் நாளும் ஏதோ*
*தெண்டனிட்டு அழுகின்றேன்*
*உன் ஆத்மா சாந்திபெற*

**பேறாமகள்**
**சிந்துஜா**

## மூத்த மகனாய் நின்றாயே....

*ஆசை மருமகனாய் இல்லாமல்*
*அன்பு மகனாய் நின்றாயே*
*துன்பம் கண்டே துடித்தபோதெல்லாம்*
*துடுப்பாய் நின்றே காத்திட்டாயே*
*மக்களை இழந்து துடித்தபோதெல்லாம்*
*பண்புடன் வந்தே ஆறுதல் தருவாயே*
*தேடித் தேடி துடிக்கின்றேன்*
*தேசமிழந்தே தவிக்கின்றேன்*
*பாசமாய் ஓடி வந்தே மாமி என்றே*
*மீண்டும் மீண்டும் அழைக்காயோ*
*விண்ணுலகம் சேர்ந்து நின்றே*
*மண்ணுலகம் வந்து காணாயோ*

**அன்பு மாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்தம் கலங்கி நின்றேன்

பனிபடர்ந்த தேசம் கண்டேன்
பனிமனதை தொலைத்து நின்றேன்
கருணை இல்லா ஆண்டவனை
கருதி மனம் வேகுதையா
இறந்துபோன சேதி வந்தே
இதயம் கீறிப் பிளந்ததே
ஆசை முகம் கண்ணில் வந்தே
மறைந்து மறைந்து போகுதே
மறக்க முடியவில்லையே
மலர்ந்து நின்ற வதன முகம்
ஏற்றம் தந்தாய் நிமிர்ந்து நின்றேன்
ஏங்கி நின்றேன் தாங்கி நின்றாய்
பார்த்திருக்க மறைந்ததேனோ

**பேறாமகள்**
**லாவண்யா ஜெயந்திரன் (லண்டன்)**

## காலனவன் அழைத்தானோ

பாசத்தை மனதில் வைத்தே
பார்வையால் கண்டிப்பாயே
கண்ணிமைத்து முடியுமுன்னே
கதிகலங்கிப் போனோமையா
மோகனென அழைப்பாய்
விரைந்து வந்து அருகிருப்பேன்
மண்ணுலகில் மைத்துனராய் நாமே
மகிழ்ந்திருந்த நாட்கள் எங்கு வரும் அத்தானே
விண்ணுலகப் பயணம் என்பதனை
ஏற்க மனம் மறுக்குதையா
வாழ்வின் விடியலைத் தந்தே
அஸ்தமனம் காட்டி மறைந்ததேனோ
மீண்டும் பிறப்பெடுத்து வரும் நாளை எண்ணி
வாஞ்சையுடன் காத்திருப்போம்

**மைத்துனன்மார், மைத்துனிமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்முகம் அமைதியாய் அடங்கியதோ

பாசமுள்ள அண்ணாவே
பரிதவித்துப் போனோமே
நேசம் கொண்ட இதயத்தை
யமன் நெருப்புவைத்தழித்தானே
கள்ளமில்லா குணமண்ணாவை
கொன்றொழித்துப் போட்டானே
ஊர்ச்செய்தி கேட்டபடி
மனம் நொந்து போவாயே
பாசமாய் சேர்ந்து நிற்க
பாவிமனம் துடிக்குதையா

**உடன்பிறவா சகோதர, சகோதரிகள்**

## ஏற்றவழி எமக்குச் சொல்லி

உறவுகளைத்தேடிய படியே
துடித்த துடிப்பை அறிவோமையா
வெருகல் கொடியேற்றம்
இதயத்தில் பால் பொங்க வைக்கும்
ஊர்க் கோயில் தேடி
முடிந்தவரை மகிழ்ந்து நிற்பாயே
கள்ளமற்ற உன் உருவை
கடைசிவரை மறப்போமா
தெய்வமாய் வாழ நிதம்
மலர் தூவி துதிக்கின்றோம்

**உற்றார், உறவினர்**

## தேற்றம்

தேறு தேறு நீ மனமே சித்தும் அசித்தும் இரண்டதனில்
தேறும்போது இவ்வுடலும் தெளிவாய் அழியும் அசத்தென்றே
கூறும் பஞ்சபூதங்களால் கூட்டிய பண்டமிதுவன்றோ
நீறாய் நெருப்பில் அழிவதன்றி நிலைக்கும் உயிர்தான் அழிந்திலதே

**கவிதையாக்கம் -**
**கவிஞர் க.யோகானந்தன்**
**(அதிபர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபரக்கிரியைகள்

ஒருவர் இறந்தபின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரசினால் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம்- பிந்தியது எனப்பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை. தாய்தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும் இல்லாதபோதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக்கிரியைகளின் பலனை சிவாகமங்களும் புராண, இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன்தரா என்பது கௌசிகர் வரலாற்று மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாம்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க்கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை "தென்புலத்தார்" என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறுகளும், சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரந் தவறியவராவர். பிதிரர் வருந்தின் பெரும் தீமைகள் நேரும்.

## அபரக்கிரியைகள் வகை

இவை தகனக்கிரியை, அத்தியஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவைகள் உத்தரக்கிரியை சிரார்த்தக் கிரிய்யை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோரை சைவர் என்று சொல்லுந் தகுதி பெற்றவர். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக் கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயாவார். அவர்களுக்குரிய உத்திர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிரார்த்தம் குருபூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.

மற்றவர்களுக்கு பூதவுடலில் தீட்சை வைத்த பிறகு கிரியைகள் செய்யலாம். வாழ்நாள் முழுவதும் அசைவ உணவுகளை உண்ணாத சுத்த சைவர்களுக்குப் பூதவுடலிலேயே அந்தியேட்டியும் செய்யலாம்.

## மரணக் கிரியைகள்

சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனக் கிரியையில் மூன்று பகுதிகள் உண்டு. அவையாவன பேரிகையடித்தல், உடற்சுத்தி, ஆன்ம சுத்தி என்பனவாம்.

## பேரிகையடித்தல்

ஆசாரியார் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்திபண்ணி, மேளத்திலே பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளமடிக்கும் போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும். எனவும் பூமியிலும் மறு உலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினத்திற்கும் ஐசுவரியம் உண்டாக வேண்டும். மிருகம், பறவை முதலிய உயிரினத்திற்கும் நன்மை உண்டாக வேண்டுமெனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கின்றேன். சிவபெருமானன் அதனை இரட்சிக்க என்பதாம். (இன்று ஆசாரியார் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கிறார்.)

## உடற்சுத்தி

சிவாச்சாரியார் பந்தலின் நடுவில் சிவகும்பமும், உருத்திரகும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்துச் சிவனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள்நீர், சிவகும்பநீர், ஆகியவகைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்தி செய்து புத்தாடை புனைந்து நீறு சாத்திப் பூச்சூடி பிரணவாசனமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாச்சாரியார் பஞ்ச சுத்திகளையும், சகளீகரணத்தையும் செய்து அக்கினி வளர்த்து, அட்டதிக்குத் தேவர்களையும் சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவார். கும்பத்திலிருந்த சிவனை உடலின் மீது எழுந்தருளும்படி வேண்டி வழிபாடு செய்வார். இருதயத்தில் ஆசனபூசை செய்து ஆன்மாவை அதில் அமைத்து, அதில் பஞ்சப்பிரமந்திரங்களைப் பதித்து அதன் இருதயத்தில் சிவனை ஆவாகனஞ் செய்து கொள்வார். பின்னர் ஆசாரியார் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களை தீர்க்க ஆகுதி செய்து அவ்வுடலுக்குந் தனக்கும் நாடி சந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்டு வந்து, உருத்திரனைத் தியானித்துப் பூரணாகதியுடன் உருத்திரமூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

## சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்

பாவங்களை நீக்குவதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகின்றது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்குப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப் பெறும்.

## சுடலை சேர்த்தல்

உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் பொழுது அட்டதிக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற்பொரி தூவப்படும். (சைவாசாரமுள்ள ஒருவரே அதனைச் செய்யத்தக்கவராவார்) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக்கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நாலு முழ நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம் என்று பெயர் பெறும். இச் சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன் மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயிடல் (தகனக்கிரியைகள்)

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்ப நீரை உடலுக்குத் தெளித்துக் குடத்தை முன்பாக நிலத்திற் போட்டுச் சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வர். கொள்ளி வைத்தவர் பின் நீர்க்கரையில் நீராடி வீடு செல்வர். தீ இடும்போது "அக்கினிதேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்" என நினைத்து கொண்டே தீ இட வேண்டும்.

## அத்தியஞ்சயனம் (காடாற்றல்)

அத்தியஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த்தலாகும். அத்தி- எலும்பு, சஞ்சயனம்- கரைத்தல், இஃது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளையும் சாம்பலுடன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்யலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள், சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாகும்.

## நக்னதானம்

இது தகனக்கிரியை முடிந்த பின் இறந்தவரின் பசி தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டுக் குடும்பத்தாரால் ஆசாரியாருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல்.

## ஆசௌசம்

இதைத் துடக்கு என்று கூறுவதுண்டு. இறந்த ஆத்மாவின் இரத்த உறவு தொடர்புடையோர் அந்த ஆன்மா சாந்தி பெறவேண்டிக் கிரியை செய்து பிரார்த்திக்கும் நாட்கள் ஆசௌசம் எனப்படும். இந்த நாட்களில் வேறு சிந்தனைகளின்றி மங்கள நினைவுகள் தவிர்த்து, தனியாய் அவர் சார்ந்த குடும்பத்தினர் ஆ-ஆன்மா,சௌ- சௌக்கியம், சேஷம் பெற ஒடுங்கி இருக்கும் நாட்கள் (இது ஜனனம், மரணம், தகனம்) என மூவகைக்கும் பொருந்தும். பூமியில் புதிதாய் ஜனனிக்கும் ஒரு ஆன்மாவின் பூமி வாழ் சௌக்கியத்திற்காகவும், அசௌசம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இது பிராமணர்களுக்கு பதினொரு நாட்களும், இசை வேளாளர்களுக்கு பதினாறு நாட்களுக்கும் முறைப்படி தீட்சை பெற்றோருக்கு இருபத்தொரு நாட்களும் மற்றையோருக்கு முப்பத்தொரு நாட்களுமாய் கடைப்பிடிக்க வேண்டியதாகும்.

## அந்தியேட்டி

இது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்திய- கடைசி நாள், இட்டி- யாகம் இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க்கரையில் நிகழும் குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க்கரையில் நிகழுங் கிரியை இதுவாகும். இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடாண பூசை

(பாஸாண பூசை) ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை. இப் பூசையினாலும், இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சில பதவியை அடைக்கத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஈன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாம்.

## ஏகோதிஷ்டம்

இது அந்தியேட்டி செய்த அடுத்த நாளில் செய்வதாகும். இறந்த ஆத்மாவிற்கு "திருப்தி உண்டாகும் வண்ணம்" சிவ பூசை செய்யும் சிவாச்சாரியார்களைக் கொண்டு, அந்த ஆன்மாவைச் சேரும் பொருட்டு ஏகோதிஷ்டம் ஏக ஒருவரை உத்தஸ்டம் கருதுதல், அதாவது இறந்த ஒருவரைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவது ஏகோதிட்டம் வரிக்கும் அந்தணரைத் தமது இறந்த ஆத்மாவாகக் கருதி கொடுக்கப்படுவது. சாப்பாட்டுப் பொருட்கள், உடை, செபமாலை, காலணி, குடை, பொன், பொருள் என அவர் நித்திய கருமங்களுக்கு உபயோகிக்கக் கூடியதாகவும் நித்தம் அவர் பூசை செய்யும் போது அந்த நினைவில் அவர் ஆன்ம சாந்திக்கும் ஒரு பிரார்த்தனை செய்யக் கடவர், அதலாலேயே "ஏகோதிஷ்டம்" கொடுப்பவரும் திருப்தியாகக் கொடுக்க வேண்டும். வாங்குபவரும் அந்த ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்க வேண்டும். இருவரும் ஏக ஒருவரை உத்திஸ்டம் கருதி செய்வது எனப்படும்.

## சபிண்டீகரணம்

இந்நாளிலேயே நான்கு தேவர் எனக் கூறப்படும் விசுவதேவர், அப்பியாகதர், பிதுர்தேவர், நிமித்தர் என நால்வகைப்படும். தேவருக்கு கொடுக்கும் பூசை உபசாரதானங்களே சபிண்டீகரணம் எனப்படும். இதற்கு அவரவர் வசதிக்கேற்ற இரண்டு அல்லது நான்கு பிராமண சிவாச்சாரியார்களுக்கு முறையான உபசாரங்களோடு உபசரித்து அவர்களின் மந்திர உச்சாடனங்களோடு திருப்திகரமான தானாதிகள் செய்து பிண்டங்களை ஒரு வடிவமாக்கி தண்ணீரில் விடுதல் அல்லது கரைத்து பசு மாட்டிற்கு வைத்தல் உத்தமமாகும். ஒவ்வொரு வர்க்கமாய் பிதுர்வர்க்கம் மூன்று மாத்துரு வர்க்கம் 3, நிமித்தர்1, தகப்பன் வழி, தாய்வழி, இறந்தவர் என ஏழு பிண்டம் பிடித்து வைத்து பூசித்து எல்லாவற்றையும் சேர்த்து பிதிர் தேவர் ஆக்கி விடுதல் சபிண்டீகரணம் ஆகும்.

## மாசிய சிரார்த்தம்

ஆண்டுத் திவசம் முடியும் வரை இறந்த ஆன்மாவானது இறந்த திதியில் தனது இல்லம் நாடும் என்கிற மரபுக்கேற்ற ஒவ்வொரு மாதமும், அந்த ஆன்மா இறந்த திதியிலும் விசேடமாக 45, 180, 360- ம் நாட்களிலும் அந்தணர்களுக்குத் தானம் கொடுத்து வீட்டிலே ஆன்மாவிற்குப் படையல் வைத்துப் பூஜிப்பது மாசியம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டுத்திவசம்

(வருட சிராத்தம்) இந்த சிராத்தமே ஆன்மாவிற்கு ஓரிட ஓய்வு தருவது. அங்குமிங்கும் இடை நடுவாய் அல்லாது, அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம் என முறையாக ஆன்மாவிற்கு மகிழ்ச்சி தரும் கிரியைகள் செய்து, ஆண்டுத் திவசத்தில் ஆன்மா மோட்சம் பெறும் என்பது ஐதீகம். எனவே இத் திவசமும் முற்கூறியவை போல் திருப்திகரமாய் செய்யப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.

## வருட சிராத்தம்

ஒவ்வொரு வருடமும் இறந்த ஆத்மாவின் திதியில் செய்யப்படுவது இதுவாகும். இதற்குக் கணக்கு இல்லை. எம் உயிருள்ளவரை எம்மால் இயன்றவரை இதைத் தொடர்ந்து செய்வதால் எம்வம்சம் தழைத்தோங்கவும் எமக்கு எமது பிள்ளைகள் கிரியைகள் செய்யாவிடினும் அந்தப் பலாபலன் எமக்குக் கிடைக்கிறது.

## மஹாளயம்

ஆவணிமாத தேய்பிறை பிரதமை முதல் புரட்டாதி மாத அமாவாசை வரையிலான பதினைந்து அல்லது பதினாறு நாட்கள் பிதிரர்களுக்குரிய பிரியமான பண்டதானம் தர்ப்பணம் முதலியன செய்யும் காலமே மஹாளயம் எனப்படுகிறது.

தட்சணாயத்தில் சூரியன் தெற்கு நோக்கி சஞ்சரிக்கும் காலம் அதன் நடுப்பாகம் புரட்டாதி மாதம் அதாவது பூமிக்கு நேரே நிற்கும் காலமும் சந்திரன் தென் பகுதிக்கு நேராகவும் நிற்கும் காலமாக அமைவதாலும் இக்காலம் பிதிரர்களுக்குரிய பிரியமான விஷேடமான காலமாக அமைகின்றது. சில வேளைகளில் வருட சிராத்தம் நாம் செய்யத் தவறி இருப்பின் செய்ய முடியாத நிலமைகள் அமைந்து விடினும் அதை இந்த மஹாளய பட்ச நாளில் செய்து கொள்ளலாம்.

## அமாவாசை விரதம்

இது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி திதி முடிந்த பதினைந்தாம் நாளில் வருவது இந்த நாளில் "தாமகு" தந்தை, பாட்டன் வழியினருக்கும் தர்ப்பணம் செய்து விரத அனுட்டானம் செய்வது மரபு. இந்த அமாவாசை விரதங்களிலே ஆடி மாதத்தில் வரும் அமாவாசை சிறப்பு வாய்ந்தது. இந்நாளில் தந்தை வழியினர் சிராத்தங்கள் செய்யத் தவறியோர் இந்நாளில் செய்யலாம். பிதிரர்களுக்குரிய திசையாகிய தெற்குத்திசைப் பக்கமாய் சூரிய பகவான் உதயமாகும் காலமும் சந்திரனின் ஆட்சி வீடான கடக இராசியும் சூரியன் சஞ்சரிக்கும் காலமும் கொண்ட இந்நாள் பிதிர்களின் பிரிய நாள் எனவே இந்த ஆடி அமாவாசை புனிதத்துவமும் மகிமையும் நிறைந்த நாளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூரணை விரதம்

இவ்விரதம் ஒவ்வொரு மாதமும் அமாவாசை திதி முடிந்த பதினைந்தாம் நாளில் வருவது. இந்நாளில் தாயாருக்கும், தாய்வழி உறவினருக்கும் விரதமிருந்து தர்ப்பணம் செய்து அன்னதானம் செய்வது உத்தமம். பௌர்ணமி விரதங்களிலே சிறப்பு வாய்ந்த "சித்ரா பௌர்ணமி" சூரியன் தனது உச்சம் பெற்ற வீடாகிய மேஷ இராசியில் சஞ்சரிக்கும் காலம் அதே நேரம் மாதுரு காரகன் சந்திரன் ஏழாம் இடம் சஞ்சரிக்கும் காலம் சூரியன் பிதா கிரகம் சந்திரன் மாதா கிரகம் என்பது சோதிட நூல்கள் கூறும் விதி. இந்த இரு கிரகங்களின் சேர்க்கை பார்வை பெறும் நாட்கள் பிதிரர்களின் பிரிய நாளாகின்றன. எனவே தான் ஆடிஅமாவாசை சித்ரா பௌர்ணமி சிறப்புப் பொருந்திய சிரார்த்த தினமாக பேணப்படுகின்றது.

## வம்சா வழி

கந்தையா + அன்னம்மா — சித்திரவேல் + கற்பகம்

குணநாயகம் + கமலேஸ்வரி

அமரர் ராஜ்குமார் | சுபாஜினி | ராதாமோகன் (ராதா) | ராஜமனோகரன் (ராஜ்) | ஸ்ரீ கணேசன் (சுமன்)

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடி பெறும்
உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்
கோடான கோடி கொடுப்பினும் தன்னுடை "நா" கோடாமை கோடி பெறும்



ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. ஏகப்பொருள் :- இறைவன்

02. இருவினை :- நல்வினை, தீவினை,

இருநிதி :- சங்கநிதி, பதுமநிதி

03. முக்கனி :- மா,பலா,வாழை

04. நால்வர் :- சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர்

05. பஞ்சபூதம் :- நீர், நிலம், காற்று, ஆகாயம், தீ

ஐம்பெருங்காப்பியம் :- சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி

ஐவகை நிலம் :- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

06. காலங்கள் ஆறு :- இளவேனிற்காலம்
முதுவேனிற்காலம்
கார்காலம்
கதிர்காலம்
முன்பனிக்காலம்
பின்பனிக்காலம்

அறுசுவை :- இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கசப்பு, உறைப்பு

07. ஏழு ஸ்வரங்கள் :- ஸ,ரி, க, ம, ப,த, நி, ஸ

கண்டங்கள் ஏழு :- ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, அந்தாட்டிக்,அவுஸ்திரேலியா

08. திசைகள் எட்டு :- வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு, தென்மேற்கு,தென்கிழக்கு

09. கிரகங்கள் ஒன்பது :- சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது

10. தசாவதாரம் :- கூர்ம, மச்ச, வராகம், வாமணன், திருமால், விஷ்ணு, நரசிம்மம், பலராம், பரசுராம், கல்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

17 - 01 - 2009 அன்று இறைபதமடைந்த

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில்

கலந்து கொண்டவர்களுக்கும்,

மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாந்தி

அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்,

ஊடகங்கள் வாயிலாக அனுதாபம்

தெரிவித்தோருக்கும், மற்றும் பலவழிகளிலும்

உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள்

அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான

நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகம்பங்களும், உயிரிழப்புக்களும்

| ஆண்டு | இடம் | ரிச்டர் அளவு | உயிரிழப்பு |
|---|---|---|---|
| 1935ம் ஆண்டு | இந்தியா (கொட்டா) | 7.5 ரிச்டர் | 50,000 பேர் |
| 1939ம் ஆண்டு | சிலி | 8.3 ரிச்டர் | 28,000 பேர் |
| 1939ம் ஆண்டு | துருக்கி | 7.9 ரிச்டர் | 33,000 பேர் |
| 1952ம் ஆண்டு | ரஷ்யா | 9.0 ரிச்டர் | - |
| 1957ம் ஆண்டு | அலாஸ்கா | 9.1 ரிச்டர் | - |
| 1960ம் ஆண்டு | மொரொக்கோ | 5.7 ரிச்டர் | 12,000 பேர் |
| 1960ம் ஆண்டு | சிலி | 9.5 ரிச்டர் | - |
| 1964ம் ஆண்டு | அலாஸ்கா | 9.2 ரிச்டர் | - |
| 1976ம் ஆண்டு | கௌதமாலா | 7.5 ரிச்டர் | 22,778 பேர் |
| 1976ம் ஆண்டு | சீனா (தாங்ஸான்) | 8.2 ரிச்டர் | 240,000 பேர் |
| 1985ம் ஆண்டு | மத்திய மெக்சிகோ | 8.1 ரிச்டர் | 9,500 பேர் |
| 1988ம் ஆண்டு | வடமேல் ஆர்மோனியா | 6.0 ரிச்டர் | 25,000 பேர் |
| 1990ம் ஆண்டு | ஈரான் | 7.7 ரிச்டர் | 50,000 பேர் |
| 1993ம் ஆண்டு | லட்டூர் இந்தியா | 6.0 ரிச்டர் | 10,000 பேர் |
| 1995ம் ஆண்டு | ஜப்பான் | 7.2 ரிச்டர் | 6,000 பேர் |
| 1998ம் ஆண்டு | வட ஆப்கானிஸ்தான் | 6.9 ரிச்டர் | 5,000 பேர் |
| 1999ம் ஆண்டு | துருக்கி | - | 17,000 பேர் |
| 1999ம் ஆண்டு | தாய்வான் | - | 2,400 பேர் |
| 1999ம் ஆண்டு | கொலம்பியா | 6.1 ரிச்டர் | 1,171 பேர் |
| 2001ம் ஆண்டு | இந்தியா | 7.9 ரிச்டர் | 13,000 பேர் |
| 2002ம் ஆண்டு | வட ஆப்கானிஸ்தான் | - | 1,000 பேர் |
| 2003ம் ஆண்டு | ஈரான் | 6.5 ரிச்டர் | 26,000 பேர் |
| 2003ம் ஆண்டு | வட அல்ஜீரியா | 6.8 ரிச்டர் | 2,300 பேர் |
| 2004ம் ஆண்டு | இந்தோநேசியா | 9.0 ரிச்டர் | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை நீ இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



026 - 2222850

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org